பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 13 சனிக்கிழமை (28-11-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 02

பொதுசன நூலகம் மாநகரசபை 28-11-1992 யாழ்ப்பாணம்

## ஷெல் தாக்கு

தெல்லிப்பழை, நவ 28

ஸ்ரீலங்காப் படையினர் நேற்று முன்தினம் (வியாழக்கிழமை மாலை தொடக்கம் நேற்று அதிகாலை வரை வளவெட்டி, ஏழாலை, தெல்லிப்பழை, இளவாலை, கட்டுவன், மண்டதிகரிப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

சண்டிலிப்பாயை அண்டிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

# சமஷ்டி முறையிலான தீர்வு: சிறிமாவோ பின்வாங்கினார்!

## தெற்கில் செல்வாக்கு குறையும் என அச்சம்

கொழும்பு, நவம்பர் 28

இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வு ஒன்றை முன்வைக்க சுதந்திரக் கட்சி இணக்கம் தெரிவித்து சில மணி நேரத்தில், அம்முடிவிலிருந்து அக்கட்சியின் தலைவியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பின்வாங்கினார்.

தென்பகுதி சிங்களவர் மத்தியில் செல்வாக்கு குறையும் என்ற அச்சத்தினாலேயே அவர் தமது கட்சி முடிவில் இருந்து பின்வாங்கியதாக அவதானிகள் தெரிவித்தனர்.

கடந்த வியாழனன்று நடந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுக் கூட்டத்தில்— வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருப்பதை ரத்துச் செய்ய தமிழர் குழுக்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மாவீரர்களை தெய்வமாக நாங்கள் போற்றுகிறோம்

## மாவீரர் நாள் கூட்டத்தில் இளங்குமரன் பேச்சு

யாழ்ப்பாணம், நவ 28

தியாக வேங்கைகளை— மாவீரர்களை — நாங்கள் தெய்வங்களாகப் போற்றுகிறோம்.

— இப்படிக் கூறினார் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன்.

மாவீரர் நாள் பொதுக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் யாழ். மாவட்ட அரசியல், நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் நேற்று மாலை ஆரம்பமானது.

ஆயிரக் கணக்கில் கூடியிருந்த மக்கள் மத்தியில் சிறப்புரையாற்றிய திரு. இளங்குமரன் மேலும் கூறியதாவது:-

மாபெரும் தேசிய திருவிழாவாக மாவீரர் நாள். மாவீரர் வாரம் ஆகியன கொண்டாடப்படுகின்றன.

உலகில் மிகச்சிறந்த இராணுவமாக — கரந்தடிப் படையாக — எமது அமைப்பு வந்துள்ளதற்கு தலைமையின் ஆற்றலும் அபார முயற்சியும் போராளிகளின் தியாகமும் காரணங்களாகும்.

வெற்றிகரமாக மேற்கொள்ளப்படும் தற்கொலைப் படைத் தாக்குதல்களுக்கு விடுதலைப் புலிகள் தான் காரணமாக இருக்க வேண்டும்

(2 ஆம் பக்கம் பார்க்க)

# ஓர் அரசுக்கான அடித்தளம் அமைக்கப்பட்டு வருகிறது

## யோகி தகவல்

யாழ்ப்பாணம், நவ 28

எமக்கு தெரியாமல், வெளியே உணரப்படாமல் இந்த மண்ணில் ஓர் அரசுக்கான அடித்தளம், — அடிப்படைக் கட்டமைப்பு— அமைக்கப்பட்டு வருகிறது. எமது கையில் ஆட்சியில்லையாயினும், காவல்துறை, நீதி மன்றம், பொருண்மியம் என்று பல்வேறு கட்டமைப்புக்கள் உருவாகிவருகின்றன. எமக்கு விடுதலை நிச்சயம் கிடைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை

— இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. யோகரத்தினம் யோகி.

நேற்று மாலை நடந்த மாவீரர் நாள் பொதுக்கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"கடந்த 20 வருட காலமாக தமிழ் மக்கள் எதிர் பார்க்காத அளவு வரலாற்றுச் சாதனைகளை எமது அமைப்பு நிலைநாட்டி வருகிறது. அதற்கு எமது மாவீரர்களின் தியாகம், தற்கொடைதான் காரணமாகும்.

தமிழீழத்தில் நடக்கும் தாக்குதல்களின் வெற்றி குறித்து பெருமிதம் அடையும் எமது மக்களில் பெரும்பாலானோர் அத்தாக்குதலின் பின்னணியில் உள்ள சோகத்தை உணர்வதில்லை.

அழிவுகளைச் சந்திக்காமலும், இரத்தத்தைச் சிந்தாமலும் நாம் இருக்க, விடுதலை வெறும் தட்டிலே வந்து சேராது. நாம் போராட்டி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு தமிழ்க் குழுக்கள் இன்று அரசின் ஊது குழல்கள்

## சாடுகிறார் பாலகுமாரன்

யாழ்ப்பாணம், நவ. 28

தேசிய இனம், தன்னாட்சி என்று பேசிவந்த தமிழ்க் குழுக்கள் இன்று கொழும்பு அரசின் ஊதுகுழல்களாக இயங்குகின்றன. ஆனால் எமது அமைப்பு வைத்த கொள்கையில் இருந்து பின்வாங்காமல் போராடி வருகிறது. அதற்குப் பின்னணி எமது போராளிகளின் தியாகம் தான்.

இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு வே. பாலகுமாரன்.

நேற்று மாலை நடந்த மாவீரர் நாள் பொதுக்கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார். அவர் மேலும் கூறியதாவது.

தமிழ்த்தேசிய வடிவத்தை உருவாக்கவே எமது போராளிகள் தியாகம் செய்கிறார்கள். அந்த வடிவத்தின் அம்சம் மக்கள் என்பதை சகலரும் உணரவேண்டும்.

தன்னாட்சி உள்ள தமிழினமாக நாம் வாழவேண்டும்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டத்தை குழப்ப முயன்ற பொம்மர்கள் விரட்டியடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நேற்று நடைபெற்ற மாவீரர் தினப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்கள் மீதும், போராளிகள் மீதும் தாக்குதல் நடத்த எத்தனித்த ஸ்ரீலங்கா விமானப்படையின் பொம்மர் விமானம் துரத்தி விரட்டப் பட்டது. விமானப்படையினரின் மிரட்டல் பலிக்கவில்லை.

விடுதலைப் புலிகள் படையணிகளின் அணிவகுப்பு நடைபெற்றுக்கொண்டிருந்தபோது இரண்டு பொம்மர்கள் திருநெல்வேலி, நல்லூர், நகரப் பகுதிகளைச் சுற்றி வட்டமிட்டன; சரியாக 4; 20 மணியளவில் அவற்றில் ஒன்று கூட்ட மைதானத்துக்கு நேராகப் பெரும் இரைச்சலுடன் குதித்துப் பதிந்தது.

அவ்வேளை விடுதலைப் புலிகள் இரண்டு முனைகளில் இருந்து எதிர்த்தாக்குதல்களை நடத்தினர். அதைத் தொடர்ந்து விமானம் மிக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் தின விழாவில் எழுச்சியுடன் மக்கள்

யாழ்ப்பாணம், நவ. 28

வியாழக்கிழமை நள்ளிரவு எழுப்பப்பட்ட மாவீரர் நினைவொலியுடனும், அதன் பின்னர் ஏற்றப்பட்ட மாவீரர் சுடருடனும் ஆரம்பமான மாவீரர் நாள் விழாக்கள் மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றன.

தமிழ்ப் பிரதேசங்கள் எங்கும் மாவீரர் நாள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாவீரர் நாள் நிகழ்வுகளில் மக்கள் உணர்வு பூர்வமாகப் பங்குபற்றினர். மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப் பட்டதுடன் அவர்களின் பெற்றோர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

மாவீரர்களைக் கௌரவிக்கு முகமாக நேற்றுத் தமிழீழம் எங்கும் தேசிய விடுமுறை நாள் பிரகடனப்படுத்தப்பட்டிருந்ததால் ஏனைய அலுவல்கள் யாவற்றையும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## படையணிகள் நடத்திய கண்கவர் அணிவகுப்பு

யாழ்ப்பாணம், நவ 28

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நேற்று நடைபெற்ற மாவீரர் நாள் பொதுக்கூட்டத்தை ஒட்டி கண்ணைக் கவரும் வகையில் விடுதலைப் புலிகளின் படைப்பிரிவுகள் அணிவகுப்பு நடத்தின.

இராணுவப் பிரிவினர், கடற்புலிகள், தமிழீழ காவல் துறையினர் ஆகியோர் தத்தமது சீருடைகளுடன் வாத்திய இசையுடன் அணி நடை சென்றனர்.

அணிவகுப்பில் முதலில் மாணவர் அணியும் அதனைத் தொடர்ந்து இராணுவப் பிரிவினரும், அவர்களின் பின்னால் கடற்புலிகளும், இறுதியாகக் காவல் துறையினரும் அணிவகுத்துச் சென்றனர்.

பிற்பகல் மூன்று மணியள

(6 ஆம் பக்கம் பார்க்க)

# உலகமே வியக்கும் வகையில் ஈழ போராட்டம் முன்னணியில்!

## காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் உரை

யாழ்ப்பாணம், நவ. 28

"உலகில் விடுதலை வேண்டி போராட்டம் நடத்தி தாயக விடுதலையைப் பெற்ற பல்வேறு விடுதலை அமைப்புக்களுக்கு வல்லரசுகள் உதவியுள்ளன. ஆனால் எமது அமைப்பு போராளிகளின் ஆற்றல், தியாகம், போர்த்திறமை ஆகியவற்றைக் கொண்டே போராட்டம் நடத்தி வருகிறது. வல்லரசுகளின் உதவியின்றியே எமது போராட்டம் உலகம் வியக்கும் வகையில் முன் நகர்த்துச் செல்லப்படுகிறது."

—இப்படிக் கூறினார் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன்.

மாவீரர் நாள் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

பகைவரை மறைப்பதும் வனங்களை வளர்ப்பதும் நம் கடமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூப்புனித நீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான ஆங்கீரச வருடம் கார்த்திகை மாதம் 14ஆம் திகதி (29 - 11 - 1992) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10-00 மணி முதல் 12-00மணிவரை யுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

எங்கள் புதல்வி திருவளர் செல்வி

★ சுகிர்தா ★

அவர்களுக்கு பூப்புனித நீராட்டு விழா எமது இல்லத்தில் நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, செல்வியை ஆசீர்வதித்துச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

[தனித்தனி உங்களைச் சந்திக்க முடியாத சூழ்நிலைக்கு பொறுத்துக்கொள்ள வேண்டுகிறோம்.]

தங்கள் நல்வரவை விரும்பும்;
வே. சு. கருணாகரனும்,
குடும்பத்தினரும்.
புங்குடுதீவு - 10

இல. 68, கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
(இராமகிருஷ்ண
பாடசாலைக்கு அருகாமை)

(23410)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான ஆபேட்சகர்களிடமிருந்து 1992 டிசம்பர் 20 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் 11
2. சுருக்கெழுத்தாளர் (தமிழ்) தரம் 11

சம்பள அளவுத் திட்டம்:

சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம் / தமிழ்) தரம் 11 ரூபா 2085 — 10x40, 7x50 — 2835 ரூபா மாதமொன்றுக்கு

தகைமைகள்:

சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் 11

1. ஆங்கிலம் உட்பட மூன்று பாடங்களில் திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தி.
2. பின்வரும் ஆகக் குறைந்த வேகங்களுடன் ஆங்கிலச் சுருக்கெழுத்தில் தேர்ச்சி. சுருக்கெழுத்து நிமிடத்திற்கு 80 சொற்கள் தட்டச்சடித்தல் நிமிடத்திற்கு 35 சொற்கள்.

வயது:

40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது

குறிப்பு:

அ. தெரிவு பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.
ஆ. தமிழ் சுருக்கெழுத்தில் மேலதிக அறிவுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சுருக்கெழுத்தாளர் (தமிழ்) தரம் 11

1. தமிழ் மொழி அல்லது தமிழ் இலக்கியம் உட்பட மூன்று பாடங்களில் திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது க. பொ. த. (சாதாரணதர) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி.
2. பின்வரும் ஆகக் குறைந்த வேகங்களுடன் தமிழ்ச்சுருக்கெழுத்தில் தேர்ச்சி சுருக்கெழுத்து நிமிடத்திற்கு 70 சொற்கள் தட்டச்சடித்தல் நிமிடத்திற்கு 20 சொற்கள்

வயது:

40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

குறிப்பு:

தெரிவு பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சையின் மூலமும் ஆங்கிலச் சுருக்கெழுத்தில் மேலதிக அறிவுடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களை ரூபா 20/- செலுத்தி இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தாபனங்கள்) அலுவலகத்தில் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் ரூபா 20/- காசுக்கட்டளை / தபாற் கட்டளையும் 23x10 ச. மீற்றர் அளவுடைய சுய முகவரியிட்டு ரூ. 1/- முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையும் அனுப்புதல் வேண்டும். அரசாங்கத் திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் விபரங்கள் தெளிவின்றிக் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

- பதிவாளர்.

யாழ்ப்பாணப்-
பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்
20-11-1992

(சி-3908)


## இன்று

கைதடி நவீல்ட் பாடசாலையின் வருடாந்த நத்தார் இசை ஆராதனையும் கலைநிகழ்ச்சிகளும் இன்று சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். (இ)

★ ★ ★

யாழ். திருமறைக் கலாமன்றம் நடத்திவரும் பண்பாடு தொடர் கருத்தரங்கு இன்று மாலை 4. 30 மணிக்கு யாழ். பிரதான வீதியில் உள்ள கலாமன்றக் கேட்போர் கூடத்தில் நடைபெறும்

திருமதி எஸ். அருள்நம்பி "கண்பாடு" பற்றி கருத்துரையை நிகழ்த்துவார்.

★ ★ ★

யாழ் மத்திய கல்லூரி இந்து மாணவர் மன்றத்தின் நாவலர் கொடித்தினம் இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 5 ஆம் திகதி முடிவடையும். 5 ஆம் திகதி நாவலர் குருபூசை இடம்பெறும். (உ)

★ ★ ★

தெல்லிப்பளையில் நடைபெற்று வந்த வாழ்வகத்தின் செயற்பாடுகளை உடுவிலில் மேற்கொள்ளுவது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் ஒன்று இன்று காலை 10 மணிக்கு தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறும். (உ-152)

## பரீட்சை

வண்டத்தரிப்புக் கோட்டப் பாடசாலைகளில் ஆண்டு 3 தொடக்கம் ஆண்டு 10 வரையான வகுப்புக்களுக்கான பரீட்சைக் நாளை மறுதினம் முதல் ஆரம்பமாகி நடைபெறும்.

ஆண்டு 9, 10 வகுப்புகளுக்குரிய பரீட்சைகள் டிசம்பரில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது அது தற்போது மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது (உ 89)

## மாவீரர்களை...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

என்று வெளிநாட்டு செய்தியாளர்களும், செய்தி ஏஜென்ஸிகளும் எண்ணும் அளவுக்கு நிலைமை உருவானதற்கு போராளிகளின் தற்கொடைதான் காரணம்.

எமது போராட்டத்தை — தாக்குதல்களை — உலகம் உன்னிப்பாகக் கவனிப்பதுபோல மாவீரர் நாள், மாவீரர் வாரம் ஆகியவற்றையும் உலகம் உன்னிப்பாகக் கவனிக்கிறது

உலகில் பல்வேறு நாடுகளில் போராட்டம் நிறைவு பெற்று ஒருவருடத்தின் பின்னர்தான் அந்தப் போராட்டத்தில் பங்கு பற்றிய மாவீரர்கள், தேசிய வீரர்களாகக் கணிக்கப்பட்டு நினைவுச் சின்னம், நினைவாலயம் போன்றவை அமைக்கப்படுகின்றன; தேசிய நாளும் பிரகடனப்படுத்தப்படுகிறது

ஆனால் தமிழீழத்தில் போராட்டம் நடந்து கொண்டிருக்கும்போதே, மாவீரர்களுக்கு நினைவாலயம், துயிலும் இல்லம் போன்றவை அமைக்கப்படுகின்றன; தேசிய வீரராகக் கணித்து தேசிய நாளும் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

உலகில் ஏனைய இடங்களில் மாவீரர்களின் புகழுடல்கள் எரிக்கப்படுகின்றன அல்லது கல்லறைகளில் அடக்கம் செய்யப்படுகின்றன.

ஆனால் இங்கு அண்மைக் காலமாக மாவீரர்களின் புகழுடல்கள் கல்லறைகளில் புதைக்கப்பட்டு, அயிலும் இல்லங்களில் அவர்கள் தெய்வமாக போற்றப்படுகிறார்கள்.

எமது மூதாதையரின் காலத்தில் இந்த நடைமுறையே இருந்தது.

சங்க காலத்தில் மாவீரர்களுக்கு "நடுகற்கள்" அமைக்கப்பட்டு அவர்கள் தெய்வமாகப் போற்றப்பட்டதாக சங்ககால இலக்கியங்கள் கூறுகின்றன; — என்றார்.

விடுதலைப் புலிகள் பிரமுகர் இரு மாமா, மகளிர் அமைப்பு தலைவி ஜெயா ஆகியோ ரும் உரையாற்றினர்.

(உ-3-5-69-162)

# புலிகள் தொடர்பு நிலையம் கொழும்பில்கண்டுபிடிப்பாம்

கொழும்பு, நவ. 28

கொழும்பில் இயங்கி வந்ததாகக் கூறப்படும் விடுதலைப் புலிகளின் முக்கியமான தொடர்பு நிலையம் ஒன்றைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்தனர்.

இலங்கை வானொலி இத் தகவலைத் தெரிவித்தது

குப்பு ஒன்றைத் தொடர்ந்து சர்வதேசத் தொலைத் தொடர்புப் பணியகம் ஒன்றை பொலீஸார் கண்டுபிடித்தனர் என்றும்—

தலைநகரில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கு இந்த நிலையம் முக்கிய கேந்திரமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதலைப் புலிகள் தலைவர்களுடனும் பாரிஸில் உள்ள விடுதலைப் புலிகளின் ஐரோப்பிய தலைமை அலுவலகத்துடனும் லண்டன் மற்றும் பிற நாடுகளில்உள்ள அதன் கிளைகளுடனும் தொடர்பு கொள்வதற்கு இந்த நிலையம் பயன் படுத்தப்பட்டு வந்ததாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

# கொழும்பில் தொடர்ந்து புலிகள் நடமாட்டம்

இன்னமும் கொழும்பில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது

அண்மைக்கால தாக்குதல் சம்பவங்களைத் தொடர்ந்து கொழும்பில் தீவிரமாத சந்தேக நபர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் —

அவர்கள் பற்றிய விபரங்களை வெளியிட முடியாது என்றும் கூட்டுப் படைகள் தலைமையகப் பேச்சாளர் கேணல் சரத்முனசிங்க தெரிவித்தார். (உ-எ)

# 50 தமிழ் முதலாளிமாரின் பெயர்ப் பட்டியல்பொலீஸில்

கொழும்புப் பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பலப்படுத்துவதற்கும் தாக்குதல் நடத்துவதற்கும் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இருந்து வந்துள்ள விடுதலைப் புலிகளுக்கு ஒத்தாசை, உதவி மற்றும் வசதிகளைச் செய்து கொடுக்கும் ஐம்பது தமிழ் முதலாளிமார்கள் பற்றிய விபரங்களை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் பெற்றுள்ளனர்.

இப்படி கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இத்தமிழ் முதலாளிகள் வெள்ளவத்தை, புறக்கோட்டை, கொள்ளுப்பிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் —

இவர்கள் விபரங்கள் கைதாகலாம் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நோர்வே பாஸ்போர்ட்டுடன் கொழும்பில் தமிழர் கைது!

கொழும்பில் "எக்ஸ்போ — 92" கண்காட்சி நடந்த இடத்துக்கு அருகில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவரை கறுவாக்காடு பொலீஸார் கைது செய்தனர்.

அந்த இளைஞர் நோர்வே நாட்டு பாஸ்போர்ட் வைத்திருந்தார் என்றும்—

வெளிநாட்டு வர்த்தகர் என்று கூறிக்கொண்டு அவர் கண்காட்சிக்கு சென்றிருந்தார் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் கொழும்பு பிரதம நீதிவானின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (உ-எ)

# ஸ்ரீலங்காப் படைகளில் 1 லட்சத்து 86 ஆயிரம் பேர்!

கொழும்பு, நவ. 28

இராணுவம், கடற்படை, விமானப்படை, ஊர்காவல் படை, பொலீஸ் ஆகியவற்றில் மொத்தம் ஒரு லட்சத்து 86 ஆயிரம் பேர் உள்ளனர்.

நாடாளுமன்றத்தில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இத்தகவலை வெளியிட்டார். அவர் மேலும் சொன்னதாவது:-

இராணுவ நடவடிக்கை பற்றிய முக்கிய முடிவுகளை பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரான பிரதமரே எடுக்கிறார்.

1991 ஆம் ஆண்டில் 24 பேரர் விமானங்களை பாதுகாப்புப் படையினர் வாங்கினார்கள். அவற்றில் ஹெலிக்கொப்டர்கள், சியாமா செட்டி மற்றும் தரைத் தாக்குதலுக்கான விமானங்கள் போன்றவையும் போக்குவரத்து விமானங்களும் அடங்குகின்றன.

1992 இல் அவ்ரோ விமானம் ஒன்று வாங்கப்பட்டது. தீவிரவாத எதிர்ப்பு தாக்குதல் விமானம் ஒன்றை படையினர் வாங்க உள்ளனர்.

130 மி. மீ. நீண்ட தூர ஆட்டிலறி துப்பாக்கிகள் பெரும் எண்ணிக்கையில் படையினராக் வாங்கப்பட்டுள்ளன. பிரதான போர் டாங்கிகள், மென்ரக டாங்கிகள், பீரங்கிப் படகுகள் ஆகியனவும் வாங்கப்பட்டுள்ளன. படையினர் தமக்குத் தேவை என்று கூறிய உபகரணங்கள், ஆயுதங்கள் அனைத்தும் கொள்வனவு செய்யப்பட்டு உள்ளன — இப்படி அவர் கூறினார். (உ-எ)


## யாழ். லயன்ஸ் கழகம்
## லயன்ஸ் கழக அங்கத்தவர்களுக்கு

29—11—1992 அன்று நடைபெற இருந்த எமது வருடாந்த விழா (Charterday Celebrations) தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

இந் நிகழ்ச்சி 06—12—1992 ஞாயிற்றுக்கிழமை காலை 10-30 மணிக்கு யாழ் ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெறும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

சிரமத்திற்கு மன்னிக்கவும்;

தலைவர்:
யாழ். லயன்ஸ் கழகம்

(சி-3906)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகள் மீதான தடை விவகாரம்:

# டில்லி விசாரணை மன்றுக்கு எதிராக சென்னையில் மனு

சென்னை, நவ. 28

விடுதலைப் புலிகளுக்குத் தடை விதிக்கப்பட்டது தொடர்பாக புதுடில்லி நீதி மன்றத்தில் நடைபெற்று வரும் வழக்கு விசாரணைக்குத் தடை விதிக்கக் கோரி சென்னை மேல் நீதிமன்றத்தில் ரிட் - மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திலீபன் நினைவு மன்ற அமைப்பாளர் தேவராசன் என்கின்ற தியாகு என்பவரே இந்த மனுவைத் தாக்கல் செய்திருக்கிறார்.

கடந்த மே 14ஆம் திகதி விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்யும் அறிவிப்பை இந்திய மத்திய அரசு விடுத்ததும் —

பின்னர் அந்த அறிவிப்புக்கு சட்டரீதியான வலு வழங்குவது குறித்து விசாரிக்க ஒரு நீதிபதி கொண்ட விசாரணை மன்றம் ஒன்றை மத்திய அரசு நியமித்ததும் தெரிந்ததே.

இந்த விசாரணை மன்றின் நடவடிக்கைகளை நிறுத்தக் கோரியே திரு. தியாகு அண்மையில் ரிட் - மனு ஒன்றைத் தாக்கல் செய்திருக்கிறார். அந்த மனுவில் திரு. தியாகு தெரிவித்திருப்பதாவது —

ஈழத் தமிழர் நலனுக்காகப் போராடி வரும் இயக்கம் விடுதலைப் புலிகள் அமைப்பு ஆகும். இந்த இயக்கத்துக்கு தடை விதிப்பதாக மத்திய அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இதற்கு ஆட்சேபனை தெரிவித்து, டெல்லி விசாரணை மன்றில் நாங்கள் மனு தாக்கல் செய்துள்ளோம். நெடுமாறன், திரன், சுபவீரபாண்டியன், மணியரசன் ஆகியோரும் மனு தாக்கல் செய்துள்ளனர்.

எங்களிடம் கருத்துக் கேட்காமல் — எங்கள் தரப்பு வாதத்தைக் கேட்காமல் — விசாரணை மன்று இரகசியமாக விசாரணைகளை நடத்தி வருகிறது. இதனால் விசாரணை ஒருதலைப்பட்சமாகவே அமையும். எனவே இந்த வழக்கு விசாரிக்கப்படுவதற்கு தடை விதிக்க வேண்டும் — இவ்வாறு மனுவில் கோரப்பட்டுள்ளது.

இந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட சென்னை மேல் நீதிமன்ற நீதிபதி எம். சீனிவாசன், பதில் மனு தாக்கல் செய்யுமாறு மத்திய அரசுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டார். (உ)

# கொழும்பில் தேடுதல் நடத்த தமிழ்க் குழுக்களும் உதவும்

கொழும்பில் தேடுதல் நடத்தும் பொலிஸார் மற்றும் படையினருக்கு மாற்று தமிழ்க்குழுக்களைச் சேர்ந்தவர்களும் உதவ உள்ளனர் என்று ஏஜென்சிச் செய்தி ஒன்று தெரிவித்தது.

விடுதலைப் புலிகளை இனங்காண இந் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. [ஒ எ]

வலி. மேற்கில் ராணுவ நடவடிக்கை நீடித்தால்

# 2ஆயிரம் குடும்பங்கள் வரையில் இடம்பெயரும் நிலை ஏற்படலாம்!

## மக்களுக்கு உதவ இணையம் தீர்மானம்

யாழ்ப்பாணம், நவ. 28

வலி-மேற்குப் பகுதியில் இராணுவ நடவடிக்கை தொடருமாயின் சுழிபுரம், மூளாய், பொன்னாலை, திருவடிநிலை போன்ற இடங்களைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்படலாம்.

இதற்காக அவர்களுக்கான தயார்படுத்தலாக இல பாடசாலைகளைத் தயார் நிலையில் வைத்திருக்கவேண்டும்.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய தலைமையகத்தில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி குடும்பங்களுக்குத் தேவையான உலர் உணவை அப்பகுதி உதவி அரசாங்க அதிபரால் வழங்க முடியாத நிலை ஏற்படுமிடத்து, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் உடனடியாக முதல் 3 நாட்களுக்குத் தேவையான பொருள்களை வழங்கி உதவுவது எனவும் —

அவற்றை சமைத்த உணவாக்குவதற்கு அம் முகாம்களை பராமரிக்கும் நிறுவனங்களால் முயற்சி எடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இடம்பெயரக் கூடியவர்களை சாவகச்சேரி, கோப்பாய் போன்ற பகுதிகளில் அமைக்கவுள்ள முகாம்களுக்குக் கொண்டு செல்வதற்கான வாகன வசதியை இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் சேர்ந்த முறையில் செயற்படுத்தும் என்றும் முடிவானது. [ஒ-162]

# ஜெயலலிதா விரும்பும் வரை பாதுகாப்பு வழங்கப்படும்

## லோகசபையில் சவான் அறிவிப்பு

புதுடில்லி, நவ. 28

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு அவர் விரும்பும்வரை தேசிய பாதுகாப்புப் படையினர் பாதுகாப்பு வழங்குவார்கள்.

இவ்வாறு மத்திய அரசு அவருக்கு உறுதிமொழி அளித்திருக்கிறது.

வியாழனன்று லோகசபையில் அ.இ.அ.தி.மு.க.வின் எம். பி. ஜி. நாராயணன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் இந்த உறுதிமொழியை அளித்தார்.

முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்டு வரும் தேசிய பாதுகாப்புப் படையின் பாதுகாப்பை விலக்கிக் கொள்ளும்படி தமிழக தலைமைச் செயலாளருக்கு தொடர்ந்து நெருக்குதல் தரப்பட்டு வருவதாகவும் —

தமிழ்நாடு அரசு தனது சொந்த பாதுகாப்புப் படையை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது என்றும் —

அதுவரையிலும் தேசிய பந்தோபஸ்து படையினரின் காவல் பொறுப்பு நீடிக்கப்பட வேண்டும் என்று மாநில அரசு விரும்புவதாகவும் திரு நாராயணன் கூறினார்.

மத்திய அரசிடம் இருந்து நெருக்குதல் வந்ததை அடுத்தே தேசிய பந்தோபஸ்து படையை விலக்கிக் கொள்வதற்கு தமிழகத் தலைமைச் செயலாளர் ஒப்புக் கொண்டார் என்றும் திரு. நாராயணன் சொன்னார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாகவே முதலமைச்சர் ஜெயலலிதா மிகவும் அச்சுறுத்தப்பட்ட நிலையில் உள்ளார் என்றும் திரு. நாராயணன் கூறினார். (இ எ)


# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி; யாழ்ப்பாணம்.

S. L. A. S. போட்டிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள்

1. கிரகித்தல்
2. பொது உளச்சார்பு
3. பொது அறிவு

ஆசிரியர்: திரு. அ. குமாரவேல்

ஆரம்பம்: 02 - 12 - 92

பிற்பகல் 3 - 00

நிர்வாகி:

(இ/3810) திருமதி ச. அருள்நங்கை


கொழும்பில் தாக்குதல் பீதி!

# தூதரகத்துக்குப் பாதுகாப்பு: இந்திய கொமாண்டோ வரும்

கொழும்பு, நவ. 28

கொழும்பு மாநகரில் விடுதலைப் புலிகள் நடத்தும் என எதிர்பார்க்கப்படும் திடீர்த் தாக்குதல்களில் இருந்து இந்தியத் தூதரக அலுவலகங்களையும் இந்திய ராஜதந்திர சமூகத்தையும் பாதுகாக்க இந்தியாவின் விசேட கொமாண்டோ படைகள் தருவிக்கப்படலாம்.

இலங்கை அரசின் சம்மதத்துடன் கொமாண்டோப் படையினர் கொழும்புக்குக் கொண்டு வரப்படுவார்கள் என்று இந்தியத் தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இத்தகவலை 'த ஐலண்ட்' நாளிதழ் வெளியிட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு சில வெளிநாட்டுத் தூதரகங்கள் இலக்காகும் சாத்தியமும் இருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் புதுடில்லி விஜயத்துக்குப் பின்னர் இந்திய - இலங்கை ராஜதந்திர உறவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை சீர்குலைக்கும் நோக்குடன் இந்திய ராஜதந்திரிகளை விடுதலைப் புலிகள் தாக்க முயற்சிக்கலாம் என்று அதிகாரபூர்வ அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ)

★ சாவகச்சேரிப் பகுதியில்

# பழைமையான கல்வெட்டும் பானை ஓடுகளும் மீட்பு

தென்மராட்சி, நவ. 28

சாவகச்சேரிப் பகுதியில் பழைமை வாய்ந்த நாகதம்பிரான் விக்கிரகம் கண்டு பிடிக்கப்பட்ட காணியில் தொன்மையான எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றும் பானை ஓடுகளும் மேலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள காணி ஒன்றில் கடந்த வெள்ளிக்கிழமை மரவள்ளி நடுவதற்காக கொத்தியபோது செம்பினாலான — ஒன்றரை அடி உயரமுடைய — நாகதம்பிரான் சிலை ஒன்று மீட்கப்பட்டதும் —

இந்தக் காணிக்கு அருகில் உள்ள மற்றொரு காணியில் சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னர், இரண்டு அடி உயரமான அம்மன் விக்கிரகம் ஒன்று கண்டெடுக்கப்பட்டதும் தெரிந்தவையே.

இவ்விடத்தில் இந்து ஆலயம் இருந்ததற்கு ஆதாரமான தகவல்களை வைத்திருப்போர் சாவகச்சேரி வாரிவனேஸ்வர இந்து இளைஞர் மன்றத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டிருக்கிறது. [உ-117]

# யாழ்ப்பாணத்துக்கும் மன்னாருக்கும் கப்பலில் இலவச பாடப் புத்தகங்கள்

யாழ்ப்பாணம், நவ 28

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கு கப்பல் மூலம் இலவசப் பாடப் புத்தகங்கள் எடுத்துச் செல்லப்பட்டு விநியோகிக்கப்படும்.

கல்விச் சேவைகள் அமைச்சர் சுனித்ர ரணசிங்க புதன் இத்தகவலை நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு பற்றிய குழு நிலைவிவாதம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

புதிய கல்வி ஆண்டுக்கென 35 கோடி ரூபா பெறுமதியான பாடப் புத்தகங்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

ஒருகோடி 20லட்சம் பாடப் புத்தகங்கள் நாட்டின் பல பகுதிகளுக்கும் ஏற்கனவே எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

ஆண்டு ஒன்று மாணவருக்கு புதிய பாடப்புத்தகங்கள் விநியோகிக்கப்படும்.

புதிய சரித்திர பாடப் புத்தகமும் அச்சிடப்பட்டுள்ளது.

ஆண்டு மூன்றில் இருந்து ஆங்கில மொழி போதிக்கப்படவுள்ளது — இவ்வாறு அமைச்சர் கூறினார். (இ-எ)

# பொருள்கள் இறக்கும் வேலைகள் மந்தம்

யாழ்ப்பாணம், நவ. 28

பருத்தித்துறையில் தற்போது தரித்து நிற்கும் "உமணி" கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் மந்தகதியிலேயே நடைபெற்று வருவதாக அறிய வந்தது.

பொருள்களை இறக்கி ஏற்றுவதற்குப் பயன்படுத்தப்பட்ட நான்கு 'பாஜ்'களில் இரண்டு பழுதடைந்துள்ளதாலும் இவ்வாறு தாமதம் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஒ-162)


# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

கணக்கியல்

S. K. பிரபாகரன்

93 பிரிவு I 2-00 - 4-00 ஆரம்பமாகிவிட்டது.

புதிய பிரிவு II 4-00 - 6-00 மணி.

94 புதிய பிரிவு II 1-00 - 2-00 மணி.

ஆரம்பம்; 29-11-1992

★ அனுமதியை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும் (சி-3795)


# நினைவூட்டல்

யாழ். இந்து பழைய மாணவர் சங்க உறுப்பினர்களுக்கு —

எமது விசேட பொதுக் கூட்டம் 1992 - 11 - 29ஆம் திகதி காலை 10-00 மணிக்கு இடம்பெறும்.

பாலசுப்பிரமணியம் தவபாலன், செயலர்.

யா. இ. க.

பு. மா. ச. (இ-3899)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வேப்ப மரப் பலகையில் செய்யப்பட்ட உடுப்பு வைக்கும் அலுமாரி, யப்பான் ஏசியா ¾ சைக்கிள், றோனியோ இயந்திரம் முதலியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 65 [185], பிரதான வீதி, யாழ்ப்பாணம். [5592]

### கலண்டர் விற்பனைக்கு

1993ஆம் ஆண்டிற்கான மெய்கண்டான், லீலா, அஷ்டலக்ஷ்மி கலண்டர்கள் விற்பனையாகின்றன. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-3785]

### தேவை

ஆண் நிர்வாக உத்தியோகத்தர் தேவை. வயது 25 முதல் 30 வரை. சம்பளம் நேரில் தீர்மானிக்கப்படும். சனி காலை 9 மணிக்கு தொடர்பு கொள்ளவும்: கலை, வர்த்தகக் கல்லூரி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். (சி/3809)

### கண்டெடுக்கப்பட்டது

சரவணை 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் இவராத்திரி (400521638V) என்பவரின் அடையாள அட்டை வீதியில் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தொடர்பு: சோ. புவனேந்திரன், றெப்பானா, 15, றக்கா வீதி, யாழ்ப்பாணம். [23394]

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? விவாகம் நடைபெறுமா? வியாபாரம் விருத்தியாகுமா? உடல் நோய், மனக்கவலை என்பன தீருமா? கேட்டுப்பாருங்கள்! த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 884, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (23381)

### இலவச திருமண சேவை

37 வயது, சித்திரை, செவ்வாய் 7, U.K. இல் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. U K இல் இருப்பவர் / பெண் அனுப்ப விரும்புபவர் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [5594]

27 வயது, பூராடம், செவ்வாய் 4, ICMA கணக்காளராக கொழும்பில் கடமை புரிபவருக்கு ஏற்ற மணப்பெண் தேவை. தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா இலவச திருமணசேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. [23403]

### பயிற்சிப் பரீட்சை

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு - 6 அனுமதி மாதிரிப் பரீட்சையும், ஆண்டு 5 புலமைப் பரிசில் [ஆண்டு4] 1993 மாதிரிப் பரீட்சையும் 29-11-92 ஞாயிறு மு.ப. 8-00, மு. ப. 11-00 நடைபெறும். பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [23373]

### நுளம்பு குத்துகிறதா?

பொன்னின் குழல் ஊதி வந்து உங்கள் பொன்னான மேனியில் ஊசி போடுகிறதா? ஒன்று செய்யுங்கள்: சாம்பிராணி புகைப்பது போல மிக்கவெற் நீம் தூபத்தைப் புகைத்துப் பாருங்கள். அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கும். மிக்கவெற். [சி-3901]

### மணமகள் தேவை

U.K 31 வயது (மகம் நட்சத்திரம் கிரகபாவம் 12) உள்ள நிரந்தர வேலை செய்யும் மணமகனுக்கு U.K இல் உள்ள அல்லது இங்குள்ள மணப்பெண்ணைப் பெற்றோர் தேடுகின்றனர். மலர் ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [23408]

### வெளிவந்துவிட்டது!

சகல A/L விஞ்ஞான பாடங்களுக்குமான கடந்த கால வினா-விடை புள்ளி விபரத்துடன் விற்பனைக்கு உண்டு; மேலும் விபரங்களுக்கு: 'A' Level Centre, முதலாம் ஒழுங்கை, மருத்திந்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-8793)

### தையல் மெஷின்கள்

யாமகோ, சிங்கரோ அல்லது பிழைகள் திருத்தவோ, 30 வருடகால தொழில் நுட்ப அனுபவம் வாய்ந்த எங்களோடு தொடர்பு கொள்ளவும், உங்கள் முகவரியைக் குறிப்பிட்டு எங்கள் முகவரிக்கு கடிதம் எழுதவும். எங்கள் ஆட்களை அனுப்பி வேண்டியதைத் திறமையுடன் செய்து தருவோம். சி. பிலிப், 46, மலையபூங்கா வீதி, கண்டிக்குளி. (5603)


### நல்லினத் தோடை

விளாத்தியில் ஒட்டிய ஒரு வருடத்தில் பலன் தரும் திடகாத்திரமான சிறந்த இனத் தோடங்கன்றுகள் விற்பனைக்கு உண்டு. இடம்: துரைஐயா, நிலாவிரையடி, நவக்கிரி, புத்தூர். [5440]

---

## முதலாண்டு முடிவிலும் தீராத துயரங்கள்

தோற்றம்: 06 — 05 — 1918



மறைவு: 10 — 12 — 1991

**வீரகத்தி வல்லிபுரம் சின்னத்துரை**

(V. V. S.)

திதி: 28-11-1992

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

419, டச்சு வீதி, சாவகச்சேரி. [23372]

---

விண்ணக வாழ்வின்

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் மலர்வின் 40ஆம் ஆண்டுகள் நிறைவும்

பிறப்பு: 31 — 12 — 1951



இறப்பு: 29 — 11 — 1988

அமரர்

**இராஜசேகரம் அகஸ்ரீன் செல்வராஜா (ஜம்பு)**

மதுரமான பேசவே, இப்பூவுலக வாழ்வை நீக்கி உம்முடன் ஒன்றித்திருக்க நேசத்துடன் தேவரீர் அழைத்துக் கொண்ட ஜம்புவின் ஆத்துமத்தை இரட்சித்தருளும்;

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 29-11-92 ஞாயிறு காலை 7 15 மணிக்கு கோப்பாய் புனித மரியாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

அன்புடன் நினைவுகூரும்;

தாய், சகோதரர்கள், மைத்துனர், பெறாமக்கள், மருமக்கள்.

கோப்பாய் வடக்கு, கோப்பாய். [23390]

---

## 73ஆவது பிறந்த தின ★ வாழ்த்து ★

(28 — 11 — 1992)

**திரு. குருமூர்த்தி கணேசமூர்த்தி**

புங்குடுதீவு ஐந்தாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது நல்லூர் யாழ்ப்பாணத்தில் வசித்து வருபவருமாகிய இவர் இன்று 28-11-1992 இல் தமது 73 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார்;

இவரை மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், கவின் பேரப்பிள்ளைகள், சகோதரி மற்றும் உற்றார், உறவினர் நீடூழி வாழ வாழ்த்துகின்றார்கள். [23404]

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

### கல்வி ஆண்டு - 1993

**O/L** EVENING CLASSES (3-00 — 6-00)
SAT., SUN. CLASSES (8 00 — 3 00)

ஆண்டு - 10, 9, 8, 7, 6

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — திரு. J. R. சூரி |
| கணிதம் | — திரு. ஜெகன் |
| ஆங்கிலம் | — திரு. விஸ்வநாதன் |
| சமூகக்கல்வி | — திரு. கோபி |
| தமிழ் | — திரு. சிவா |
| வர்த்தகம் | — திரு கருணாகரன் |
| சமயம் | — திரு. கெங்கா |

**ஆரம்பம்: 05 - 12 - 1992**

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும். [சி-3800]

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் செல்லர் தவராசா**

| தாயின் மடியில்: | அரக்கன் அழிப்பில்: |
|---|---|
| 17 — 09 — 1962 | 21 — 11 — 1990 |

திதி: 28-11-1992

மண்ணை விட்டு நீங்கள் சென்று ஈராண்டு முடிந்ததோ
கண்ணில் உங்களை வைத்து பூஜிக்கும் நாங்களோ
விண்ணில் உம் ஆத்மா சாந்தி பெற
நெஞ்சில் நாளும் இருக்கும் உங்கள் நினைவு;

உங்கள் பிரிவால் துயருறும்:

தந்தை, தாய், அக்காமார், மச்சான்மார், அண்ணா, அண்ணி, தம்பிமார், மருமக்கள், பெறாமக்கள், உற்றார், உறவினர்கள்.

வலாவினான் தெற்கு, வயாவினான். [5607]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மயக்கம் தெளிய...

போர்முனையில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்ட போதும், போரின் விளைவால் பொருளாதாரம் சீர்குலைந்த போதும், போரில் புலிகளை வெற்றிகொள்ள முடியாது என உணர்ந்துகொண்ட போது, போர் அணுகுமுறையைக் கைவிட சிங்கள அரசு தயாராக இல்லை. ஆயுதப்படைகளைப் பலப்படுத்தி, ஆக்கிரமிப்பு யுத்தத்தைத் தீவிரப் படுத்தி இராணுவத் தீர்வை முன்னெடுப்பதிலேயே அரசு கண்ணும் கருத்துமாக உள்ளது—

இதிலிருந்து நாம் ஒன்றைத் தெட்டத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது ஆயுதபலத்தால் தமிழினத்தை அடக்கி ஆள வேண்டுமென்ற சிங்கள பௌத்த பேரினவாதத்தின் ஆதிக்க மனோநிலையில் சிறிதளவேனும் மாற்றம் நிகழ்ந்துவிடவில்லை—

தமிழீழத்தின் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் மாவீரர் தினத்தையொட்டி விடுத்த செய்தியில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார். இதுவே உண்மை நிலையுமாகும்.

நாம் தொடர்ந்து போராடுவோம்; எத்தனை இடர் வரினும், எத்தனை துயர் வரினும் நாம் எமது விடுதலை நோக்கிய பயணத்தைத் தொடருவோம். எமது மக்கள் சிந்திய இரத்தமும், எமது மாவீரர் புரிந்த தியாகமும் வீண்போகாதிருக்க நாம் உறுதி தளராது போராடுவோம் — என்றும் அவர் சரியாக வலியுறுத்தியுள்ளார்.

தமிழர்கள் கடந்த நாற்பது வருடங்களாகத் தமது விடுதலைக்காகப் போராடி வருகிறார்கள். போராட்ட வடிவங்கள் காலத்துக்குக் காலம் வெவ்வேறாக அமைந்தன; அமைந்துள்ளன. ஆனால் தமிழர்களை அடக்கி ஆள வேண்டும் என்ற ஆதிக்க மனோநிலை சிங்களவர்களின் நாடி நரம்புகளில் ஊறிவிட்டதால் தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்கோ அல்லது அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கவோ அவர்களது மனம் ஒப்புவதில்லை. இன்னமும் தமிழர் பிரச்சினைக்கு ஒரு தீர்வை வெளிப்படுத்த முன்வருகிறார்கள் இல்லை.

தமிழர் தாயகத்தைப் பிரிப்பது, தமிழரின் பாதுகாப்பை தமிழர் வசம் ஒப்படைக்காமல் தாமே வைத்துக் கொள்வது ஆகிய அனுகூலமற்ற அம்சங்களை உள்ளடக்கிய அரைவேக்காட்டுத் தீர்வுகளை பெயருக்குக் கூறிக்கொண்டு தமிழர்களைத் தமது அடிமைகளாக வைத்திருக்கவே முயல்கின்றனர்.

போராட்டம் பல கஷ்டங்களைத் தந்துவிட்டது மூச்சு விடுவதற்கு ஓர் இடைவெளி தேவைப்படுகிறது ஆகையால் இடைக்காலத்தீர்வு ஒன்றைத் தந்தால் பரிசீலிப்பதே நல்லது என்று தமிழர்களில் ஒரு சிலர் கருதுகிறார்கள். இவர்களை யதார்த்தம் புரியாத கூட்டத்தினர் என்றே கொள்ள வேண்டும்.

இத்தகையோர் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தினச் செய்தியைப் படித்தால் ஓரளவு மயக்கம் தெளியலாம். எதற்கும் அசையாத சிங்கள அரசுக்கு எதிராகத் துணிச்சலுடன், உறுதியுடன் தொடர்ந்து போராடுவதைவிட வேறு மார்க்கம் இல்லை என்ற உண்மையைப் புரிந்து கொள்ளலாம்.

சமாதானம் என்ற பெயரில் தமிழர்களின் போராட்ட வேகத்துக்குத் தடங்கல்போட அனுமதிக்க முடியாது. அற்ப சொற்பங்களுக்கு ஆசைப்பட்டு இதுவரை வளர்ந்து உச்சக்கட்டத்துக்கு வந்துள்ள போராட்டத்தை மழுங்கடிக்கக் கூடாது.

---

பேச்சுவார்த்தை மேசைக்கு வருமாறு

# பிரேமாவும், சிறிமாவோவும் பிரபாவுக்கு கூட்டாக அழைப்பு விடுக்க வேண்டும்

### நாடாளுமன்றத்தில் அஷ்ரப்

கொழும்பு, நவ. 28

பேச்சுவார்த்தை மேசைக்கு வருமாறு ஜனாதிபதி திரு. பிரேமதாஸவும் எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுக்கு கூட்டாக அழைப்பு விடுக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு பற்றிய குழுநிலை விவாதம் நாடாளுமன்றத்தில் அண்மையில் இடம்பெற்றபோது அஷ்ரப் மேலும் பேசுகையில், தற்போது நடைபெறும் யுத்தத்தில் வெற்றியீட்ட அனைத்து அரசியல் கட்சிகளும் அங்கம் வகிக்கக் கூடிய அமைச்சரவை அரசு ஒன்றை அமைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

சுதந்திரக் கட்சி எம். பி. மஹிந்த விஜேசேகரா பேசுகையில் கூறியதாவது:

காபந்து அரசாங்கம் ஒன்றை அமைத்து இந்த யுத்தத்தை நடத்தி அதில் வெற்றிகாண அரசாங்கம் தயாராக இருக்கிறதா? என்று கேட்க விரும்புகின்றேன்.

இந்த காபந்து அரசில் அரசாங்கம், எதிர்க்கட்சிகள் நீதித்துறை, இராணுவம் ஆகியன அங்கம் வகிக்க முடியும்.

யுத்தத்தில் வெற்றிகண்ட பின்னர் தேர்தல்களை நடத்த முடியும்.

இது என் தனிப்பட்ட அபிப்பிராயம். சுதந்திரக் கட்சியில் 67 எம். பிக்கள் உள்ளனர்.

மக்கள் அனைவரும் தங்கள் பின்னால் அணிதிரண்டுள்ளனர் என்று படையினர் எண்ண வேண்டும்.

முறையான திட்டம், கொள்கையுடன் யுத்தம் நடத்தப்பட வேண்டும். தோற்கும் யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாக படையினர் உணர்கின்றனர். அதன் காரணமாகவே படையினர் தப்பி ஓடுகின்றனர்.

—இப்படி அவர் கூறினார். (இ-எ)

# வடக்கு-கிழக்கு யுத்தம் கொழும்புக்கு வந்துவிட்டது

### சிறிமாவோ கூறுகிறார்

கொழும்பு, நவ 28

வடக்கு - கிழக்கு யுத்தம் கொழும்புக்கு வந்துவிட்டது. கொழும்பில் விடுதலைப் புலிகள் உள்ளனர்.

நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு பற்றிய குழு நிலை விவாதத்தில் உரை நிகழ்த்துகையில் எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்று வரும் என்ற நம்பிக்கையுடன் ஒரு தசாப்தத்துக்கு மேலாக யுத்தம் ஒன்றை நடத்திக்கொண்டிருக்கின்றோம்.

எல்லைக் கிராம மக்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். படையினரும் பொது மக்களும் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்படுகின்றனர். பெரும் எண்ணிக்கையில் மக்கள் அகதிமுகாம்களில் உள்ளனர்.

கொழும்பிலும் குண்டுகள் வெடிக்க ஆரம்பித்துள்ளன.

கடற்படைத் தளபதி கொல்லப்பட்டார். நாடு போர்க்கால அடிப்படையில் செயற்படவேண்டும். இராணுவத்திடம் போதிய வாகனங்கள் இல்லை.

தங்களிடம் உள்ள பஜேரோ வாகனங்களை இராணுவத்துக்கு வழங்க சுதந்திரக் கட்சி எம். பிக்கள் தயாராக உள்ளனர்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண சுதந்திரக்கட்சி அரசு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான செல்வநாயகம், திருச்செல்வம் ஆகியோருடன் பேச்சு நடத்தியது. துரதிர்ஷ்டவசமாக செல்வநாயகத்துக்கு சுகவீனம் ஏற்பட்டது. அதனால் அரசினால் அப்பேச்சுக்களைத் தொடர முடியவில்லை.

படையினரின் மனோநிலையில் பெரும் வீழ்ச்சி காணப்படுகின்றது.

தளபதி கொப்பேகடுவவின் மரணத்துக்குப் பின்னர் படையினருக்குத் தலைமை வகிக்க எவரும் இல்லை. கொப்பேகடுவவுக்கு அரசு உரிய மரியாதை கொடுக்கவில்லை.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு இனப்பிரச்சினைக்கு உகந்த தீர்வு ஒன்றைக் கொண்டுவரும் என்று நம்புகிறேன்.

இப்படி அவர் கூறினார்.

படையினர் கேட்டுக் கொண்டபடி

# ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தால் கிளான்ஸி உயிர் தப்பி இருப்பார்

### நாடாளுமன்றத்தில் உரை

கொழும்பு மாநகரினுள் ஊடுருவியுள்ள விடுதலைப் புலிகளை வெளியேற்றுவதற்கு கொழும்பு மாநகரில் 24 மணி நேர ஊரடங்கு பிறப்பிக்கப்பட வேண்டும் என்று பாதுகாப்புப் படையினர் கேட்டிருந்தனர்: அந்தக் கோரிக்கைக்கு அரசு அப்போது செவிசாய்த்து இருந்திருக்குமேயானால் கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோ இன்று நம்மிடையே உயிருடன் இருந்திருப்பார்.

சுதந்திரக்கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பி. அனுருத்த ரத்வத்தை நாடாளுமன்றத்தில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கடற்படையைப் பலப்படுத்தாது யுத்தத்தில் இராணுவம் வெற்றி ஈட்ட முடியாது. இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை நான் ஆதரிக்கவில்லை.

அரசினால் இராணுவத் தீர்வு காணமுடியவில்லை என்றால் அரசியல் தீர்வு காண முயற்சிக்க வேண்டும்.

ஆனால் அரசாங்கமோ இரண்டையும் செய்யவில்லை; பரஸ்பரம் குற்றஞ்சாட்டுவது பிரச்சினையைத் தீர்க்க உதவாது என்றார்.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பதில் அளித்துப் பேசுகையில், ஊரடங்கை அமுல் நடத்தும்படி படையினர் கோரிக்கை விடுத்திருந்ததாக கூறப்பட்டதை மறுத்தார். (இ-எ)

# இடம் பெயர்ந்த 7,485 தமிழர் நீர்கொழும்பில்

கொழும்பு, நவ. 28

வன்செயல்கள் காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் இருந்தும் இடம் பெயர்ந்த தமிழர்களில் ஆயிரத்து 601 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 485 பேர் நீர்கொழும்பு பொலீஸ் பிரிவில் வாழ்கின்றனர்.

இப்படி அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்கள் அனைவரினதும் உண்மையான அடையாளங்களைக் கண்டுபிடிப்பதற்காக பல தடவைகள் நீர்கொழும்பு பொலீஸார் சோதனைகளை நடத்தினர் என்றும்—

அப்போது 200க்கு அதிகமான தமிழர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். என்றும் தெரிவிக்கப்பட்டது

இவர்களில் 16 தமிழர்கள் இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

(இ-எ)

# கொழும்புப் பகுதியில் கைதானோரில் டாக்டர்கள், பொறியியலாளர்கள்

கொழும்பு, நவ. 28

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கொழும்பில் கைதான 500க்கு அதிகமானோரில் டாக்டர்களும், பொறியியலாளர்களும் அடங்கி உள்ளனர்;

இப்படி நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

பணம் உள்ளவர்கள் சட்டத்தை அமுல் செய்பவர்களிடம் லஞ்சம் கொடுத்து விடுதலையாகின்றனர் என்றும், விடுதலைப் புலிகள் கூட 10 ஆயிரம் ரூபா முதல் 15 ஆயிரம் ரூபாவரை பணத்தைக் கொடுத்து விடுதலையாக முடியும் என்றும்—

ஈ.பி ஆர். எல். எவ் எம். பி. ஒருவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். (இ-எ)

# பிரபாவின் ஆதரவுடன் தேர்தலில் வெல்ல அரசு இரட்டை அணுகுமுறை

### சபையில் அத்தாவுட செனவிரத்ன

கொழும்பு, நவ 28

பிரபாகரனின் ஆதரவுடன் அடுத்த தேர்தலில் வெற்றியீட்ட அரசு இனப்பிரச்சினை விவகாரத்தில் இரட்டை அணுகுமுறையைக் கடைப்பிடிக்கிறது. ஜனாதிபதியோ அவரது பிள்ளைகளோ யுத்தத்தில் ஈடுபடவில்லை. அவர்களில் சிலர் 'பிஸ்னஸ்' நடத்துகிறார்கள்.

கேகாலை மாவட்ட ஐ. தே. மு. எம். பியான அத்தாவுட செனவிரத்ன நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசியதாவது;

தளபதிகளும், [illegible]களும் பாதுகாப்பு அமைச்சரும் கொல்லப்பட்டுள்ளனர்;

இந்த நிலையில் எப்படி சாதாரண மனிதன் தனது பாதுகாப்பை எதிர்பார்க்க முடியும்?

6 ஆயிரத்துக்கு அதிகமான படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு வெகு தொலைவில் உள்ளது. அரசாங்கத்தின் அணுகுமுறையால் எவரையும் திருப்தி செய்ய முடியாது.

எம்மால் கொழும்பில் வாழ முடியாதுள்ளது. ஆனால் ஜனாதிபதிக்கு மட்டும் 500 பேருக்கு மேல் பாதுகாப்பு வழங்குகிறார்கள். பிரச்சினைக்கு தீர்வுகாண முடியா[illegible] விலக வேண்டும்.

—இப்படி அவர் கூறினார்.

# லெபனானில் பயிற்சி பெற்ற 30 புலிகள் கொழும்பிலாம்

கொழும்பு, நவ. 28

கொழும்பில் திட்டமிட்ட தாக்குதல்களை நடத்த லெபனானில் பயிற்சி பெற்ற 30 விடுதலைப் புலிகளைக் கொண்ட விசேட பிரிவு ஒன்று அனுப்பப்பட்டிருக்கிறது.

புலனாய்வு வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'ஐலண்ட்' பத்திரிகை மேற்கண்டவாறு செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பு மாநகரிலும் ஏனைய இடங்களிலும் நடத்தப்படும் தாக்குதல்களின் போது உயிரிழக்கும் போராளிகளின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் பத்துலட்சம் ரூபா நட்டஈடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் வழங்கப்படவுள்ளது என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தாக்குதலுக்கு அஞ்சி வாகனங்களை மாற்றிய அரசியல்வாதிகள்!

கொழும்பு, நவ 28

கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோவை பலி கொண்ட தற்கொலைப்படை வீரரின் குண்டுத் தாக்குதல் நடந்த அன்று நாடாளுமன்றக் கூட்டத் தொடர் முடிந்து புறப்பட்ட பல அரசியல்வாதிகள் தமது உத்தியோக பூர்வ கார்களையும் பயன்படுத்தவில்லை.

அவ் வாகனங்களை முதலில் வெறுமையாக அனுப்பிவிட்டு பின்னர் தனியார் கார்களில் தங்கள் பாதுகாவலர்களுடன் அவர்கள் வீடு சென்றார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ். பிரதிநிதி யாழ். வருகை; கப்பல் சேவை பற்றிப் பேச்சு?

யாழ்ப்பாணம், நவ. 28

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கொழும்பு அதிகாரியும் பிரதிநிதி டொமினிக் டுவோர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

பலாலிக்கு விமானம் மூலம் வந்து சேர்ந்த அவர் அங்கிருந்து காங்கேசன்துறை சென்ற பின்னர் 'குமண' கப்பல் மூலம் பருத்தித்துறையை வந்தடைந்தார்.

பருத்தித்துறை—கொழும்பு பயணிகள் கப்பல்சேவை நடத்துவதற்கான பாதுகாப்பை வழங்கும்படி கூட்டுப்படைத் தலைமையகம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவைக் கேட்டிருப்பது தெரிந்ததே.

யாழ். வந்திருக்கும் திரு. டுவோர் இந்த விவகாரம் குறித்தும், யாழ். ஆஸ்பத்திரி மற்றும் அங்கு நிலவும் மருந்துப் பிரச்சினைகள் ஆகியவை குறித்தும் இங்கு விரிவாகப் பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. [உ-3]

## நூறு வயதில் காலமானார்

யாழ்ப்பாணம், நவ. 28

சுன்னாகத்தைச் சேர்ந்த மூதாட்டி திருமதி மாரிமுத்து விஸ்வலிங்கம் தமது 100ஆவது வயதில் நேற்றுக் காலமானார். இவர் சுன்னாகம் முன்னாள் அதிபர் திரு. வி. சிவசுப்பிரமணியத்தின் தாயாராவார். [உ-8]

## ஜெயலலிதா மீது குற்றச்சாட்டு:

# கலைஞர் வழக்குத் தொடர ஆளுநர் அனுமதி மறுப்பு

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக அவர் மீது வழக்குத் தாக்கல் செய்ய அனுமதி அளிக்குமாறு கோரி தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி மாநில ஆளுநரிடம் சமர்ப்பித்த விண்ணப்பத்தை ஆளுநர் நிராகரித்து விட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

இத்தகவலை திரு. கருணாநிதியே அண்மையில் மதுரையில் செய்தியாளர்களிடம் வெளியிட்டார். [உ-எ]

# புலிகளை எதிர்க்காதீர்! 'ஜெ'க்கு ஆலோசனை

சென்னை, நவ. 28

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை எதிர்க்க வேண்டாம் என்று மகாராஷ்டிர மாநிலத்தில் சிவசேனா இயக்கத் தலைவர் பால் தாக்கரே தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவைக் கேட்டுள்ளார்.

செய்தியாளர்கள் மாநாட்டுக் பேசுகையில் திரு தக்கரே இவ்வேண்டுகோளை செல்வி ஜெயலலிதாவுக்கு விடுத்தார். [உ-எ]

## படையணிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில் சுந்தரமடத்தில் ஆரம்பித்த அணிவகுப்பு பலாலி வீதி வழியாகக் கூட்டமைதானத்தைச் சென்றடைந்தது.

மூத்த உறுப்பினரும், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளருமான திரு. இளங்குமரன், விடுதலைப் புலிகள் துணைத் தளபதியும் சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் விசேட தளபதியுமான திரு. பால்ராஜ் கடற்புலிகளின் விசேட தளபதி திரு. சூசை, யாழ். மாவட்ட விசேட தளபதி திரு தமிழ்ச்செல்வன், மகளிர் படைப் பிரிவின் விசேட தளபதி செல்வி ஜெயந்தி, தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன், கடற்புலிகளின் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி நளாயினி, மகளிர் அமைப்பின் துணைப் பொறுப்பாளர் செல்வி ரஜி, யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மறவன், திருமலை மாவட்ட தொடர்பகப் பொறுப்பாளர் திரு. குகன், மட்டு. அம்பாறைத் தொடர்பகப் பொறுப்பாளர் திரு. அருண் ஆகியோர் மைதானத்தில் வைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டனர்.

[அ-5-162-69-15-143]

## உலகமே...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அவர் மேலும் கூறியதாவது:

உலகில் மொழி, மண் விடுதலைக்காகப் போராடும் அமைப்புகளாயினும் சரி, விடுதலைக்காகப் போராடித் தாயகம் மீட்ட நாடுகளின் அமைப்புகளாயினும் சரி அவற்றுக்கெல்லாம் பெரும் வல்லரசுகள் சகல உதவிகளையும் மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ வழங்கின.

எமது போராட்டமானது வெளிநாடுகளின் உதவியோ, வல்லரசுகளின் உதவியோ இன்றி மாவீரர்களின் ஆற்றல், தியாகம், போர்த்திறமை ஆகியவை மூலம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது

உலகில் உள்ள விடுதலைப் போராட்டங்களுக்கு எல்லாம் கலங்கரை விளக்கமாக விளங்கும் எமது அமைப்பு மாவீரர்களின் தியாகத்துடன் மக்களின் பங்களிப்புடன் உயர்ந்து வருகிறது ஸ்ரீலங்கா அரசின் அமைச்சர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் எமது இயக்கத்தை பாராட்டுகிறார்கள். இந்தப் பாராட்டு எம் மண்ணை மீட்கப் போராடும் போராளிகளுக்கே உரியது என்றார். [உ-3-162-69]

## ஓர் அரசுக்கான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தான் வேண்டும். அடக்கப்பட்ட இனமாக நாம் தொடர்ந்து வாழ முடியாது.

நாம் தொடர்ந்து போராடுவோம்; தமிழீழம் பெறுவோம் என்று எம்மை நம்பி—அந்த நம்பிக்கையிலேயே—5 ஆயிரம் மாவீரர்களும் தற்கொடையாளர்கள் ஆனார்கள் அவர்களின் நம்பிக்கையை நனவாக்குவோம்.

—என்றார். (உ-3-5)

## கூட்டத்தை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

உயர எழுந்து ஒரு முறை வட்டம் போட்டு விட்டுச் சென்றது. இரண்டாவது விமானமும் அதனைத் தொடர்ந்து சென்றது.

பொம்மர் தாழப் பறந்தால் பதற்றமுற்ற மக்களில் பலரும் பயத்தினால் அங்கும் இங்கும் ஓடினர். பலர் ஓடிய போது சிறு காயமுற்றனர். மற்றும் பலர் நிலத்தில் விழுந்து தரையில் படுத்தும், மற்றும் பலர் பாதுகாப்பான இடங்களைநாடி ஓடினர்.

எனினும் அதன் பின்னர் [illegible] பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர்.

[அ-162-5-15-143-69-111]

# சமஷ்டி முறையிலான....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இணங்குமானால் சமஷ்டி அரசமைப்பு முறையைக் கொண்டு வருவதை சுதந்திரக் கட்சி ஆதரிக்கும் என்று திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்ததாகவும்—

அரச தரப்பில் அமைச்சர் சாகுல் ஹமீது இதனை ஆமோதித்தார் என்றும் ஏற்கனவே செய்திகள் வெளியாகியமை தெரிந்ததே.

இந்தச் செய்தியையே சிறிமா மறுத்திருக்கிறார்.

மேற்படி தெரிவுக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர்—ஒரு சில மணி நேரம் கழித்து—திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்துக்குச் சென்றார்.

அங்கு செய்தியாளர் மத்தியில் பேசுகையில்—

தாம் சமஷ்டி அரசமைப்பு முறையை ஆதரிக்கவில்லை என அவர் மறுப்பு வெளியிட்டார்.

"சமஷ்டி என்பது சிங்களவர்களுக்கு கசப்பான வார்த்தை விரைவில் தேர்தல் நடக்கலாம் என்ற சூழ்நிலை உண்டு. இவ்வேளையில் சமஷ்டி அரசமைப்பை கொண்டு வருவதற்கு ஊக்கம் அளிக்கும் பணியில் ஈடுபட்டால் மக்கள் ஆதரவு குறைந்து போகலாம்." இத்தகைய ஓர் அச்சத்தினாலேயே ஸ்ரீ. ல. சு. கட்சித் தலைவி தமது கட்சி சமஷ்டி அரசமைப்பு முறையை ஆதரிக்கவில்லை என்று இப்போது மறுப்பதாக அவதானிகள் தெரிவித்தனர்.

தெரிவுக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட சுதந்திரக் கட்சி எம். பிக்கள் பலரையும் தனித்தனியாக விசாரித்த போது சமஷ்டி அரசமைப்புத் தீர்வுக்கு தாங்கள் உடன்பட்டது உண்மையே என்று அவர்கள் தெரிவித்தனர்.

சமஷ்டி முறைத் தீர்வுத் திட்டம் பற்றிய அறிக்கையை முதலில் அரச தரப்பு விடுக்க வேண்டும் என்றும்—

அதனை ஏற்பதாக பின்னர் சுதந்திரக் கட்சி அறிவிக்க வேண்டும் என்றும் முன்னர் இணக்கம் காணப்பட்டிருந்ததாம்.

ஆனால் அதனை மீறி ஆளும் கட்சியும், சு. கவும் சமஷ்டி முறைத் தீர்வை ஒன்றாக ஏற்கின்றன என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது என்றும்—

அதனால் சீற்றமடைந்த சிறிமாவோ ஏற்பட்ட இணக்கத்தை மீறி—சமஷ்டி முறையை தமது கட்சி ஏற்கவில்லை—என்று—அறிவித்தார் என்றும் இப்போது தெரிவிக்கப்படுகிறது. [உ-எ-3]

## ஷெல் தாக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தன அப்பகுதியில் சரமாரியான துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டபடி இருந்தன.

அதேசமயம் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு வேவு விமானங்களும், ஹெலி ஒன்றும் இரைச்சலுடன் சுற்றின.

இதனால் பதற்றமடைந்த மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்தனர்.

இதேவேளை—

நேற்றிரவும் பலாலி முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்களில் ஒன்று மல்லாகம் குளமங்கால் பகுதியிலும், மற்றொன்று ஏழாலை மத்தி வீதியிலும் விழுந்து வெடித்தன (ஒ-68-13)

## மாவீரர் ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

புறக்கணித்து மாவீரர் தினக் கொண்டாட்டங்களிலேயே மக்கள் தமது நாளைக் கழித்தனர்.

அகதி முகாம்களில் தங்கியிருக்கும் பிரசவத்தாய்மாருக்கு நன்கொடை வழங்கும் தனது திட்டத்தை தீவக இடம்பெயர்ந்த மக்களின் நலன் காக்கும் கழகம் நேற்று ஆரம்பித்து வைத்தது.

(அ-15-17-13-162-111)

## கொழும்பு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கூட்டிக் கழித்து சலுகைகள் ஏற்கும் காலம் மலை ஏறி விட்டது

இராணுவ ரீதியான நடவடிக்கை மட்டும் எமது போராட்டம் அல்ல அரசியல் நடவடிக்கைக்கான தயாரிப்புப் போராட்டமும் நடக்கிறது.

எமது அரசியல் நடவடிக்கை விரைவில் தெற்கில் தாக்கத்தைக் கொண்டுவரும். அதன் மூலம் தமிழீழம்—தமிழ்தேசிய வடிவம்—விரைவில் கிடைக்கும்—என்றார்.

[உ-ஒ-69]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இளையதம்பி தங்கம்மா

திருமதி இளையதம்பி தங்கம்மா 27-11-92 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற இளையதம்பியின் அன்பு மனைவியும், அருளானந்தம், கனகலிங்கம், பஞ்சலிங்கம், சுந்தரலிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இந்திராதேவி, தனலக்ஷ்மி, கோமதி, சந்திராதேவி, [illegible] சொரூபி ஆகியோரின் மாமியும், திருவருட்செல்வன் (கனடா), உதயகுமார் (சுவிஸ்), திருமதி ரோகிணி பிரபாகரன் (சுவிஸ்), வதனி, ராஜ்குமார், சுகனி, வாகினி, முரளிதரன் (ஜேர்மனி), திருமதி சுபாங்கி, குமரகுருபரன் (சுவிஸ்), திருமதி சுபாகினி, சுதாகரன் (பிரான்ஸ்), கேதீஸ்வரன் (ஜேர்மனி), சுகந்தினி, தயாளினி, தயாளன் (பிரான்ஸ்), தர்ஷினி, காலஞ்சென்ற தயானந்தன் (சின்ன அக்காச்சி) தனுஷா, கஜேந்திரன், காலஞ்சென்ற கஜேனி, காலஞ்சென்ற சதீஸ் அமிர்தசொரூபன், அகிலன், அஜந்தன், ஆன், காலஞ்சென்ற அபிதா, கார்த்திகன் ஆகியோரின் பேர்த்தியும், பிரதீபா (சுவிஸ்), வினோஜன் (சுவிஸ்), அவராசா (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (28-11-92) அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இராச வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
(23411)

தகவல்:
திரு அருளானந்தம்
(மகன்)

## சுப்பிரமணியம் விசாலாட்சி

வண்ணார்பண்ணை முருகமூர்த்தி வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் விசாலாட்சி 27-11-92 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் மனைவியும், தங்கராஜாவின் தாயாரும், த. மனோன்மணியின் மாமியாரும் த. நிஜினோசிராஜ், த. ரூபேஜ்ராஜ், த. நிஜிதாஜினி ஆகியோரின் பேத்தியுமாவார்.

ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

64/7 முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை.
(23412)

தகவல்:
V. S தங்கராஜா
(மகன்)

# மரண அறிவித்தல்

## மாரிமுத்து விஸ்வலிங்கம்

மாரிமுத்து விஸ்வலிங்கம் நேற்று வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் சிவபதமடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற பொ. விஸ்வலிங்கத்தின் அன்பு மனைவியும், திரு. வி. சிவசுப்பிரமணியம் (இளைப்பாறிய அதிபர், ஸ்கந்தவரோதய கல்லூரி சுன்னாகம்) அவர்களின் அன்புத் தாயாரும், சிரோன்மணியின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற க. நாகலிங்கம் (இளைப்பாறிய அதிபர், நாகேஸ்வரி வித்தியாசாலை) அவர்களின் சிறிய தாயாரும்—

டாக்டர் சிவானந்தராஜா (The Medical Centre - ஆனைக்கோட்டை), காலஞ்சென்ற சிவஞானேஸ்வரி (ஆசிரியை) சிவஞானசுந்தரம் (உதவி முகாமையாளர், இலங்கை வங்கி, திருகோணமலை), டாக்டர் சிவபாலன் (Jothy Dispensary - புத்தூர்), சிவதாசன் (பொறியியலாளர், இலங்கை மின்சார சபை திருகோணமலை), சிவரத்தினம் (விலை மதிப்பீட்டுத் திணைக்களம், யாழ்ப்பாணம்), சிவமனோகரன் (U K), சிவலோஜனாதேவி (ஆசிரியை, ஸ்கந்தவரோதய கல்லூரி), மணிமேகலை, காலஞ்சென்ற இராஜசிங்கம் (ஆசிரியர்), ஆனந்தி (அதிபர், இராமநாதன் கல்லூரி), யோகேஸ்வரி, கமலாதேவி (ஆசிரியை), சுபத்திராதேவி, தேவகி, தவராஜா (நில அளவையாளர், சவுதி அரேபியா) ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

டாக்டர் சுப்பிரமணியம் வீதி
சுன்னாகம்.

தகவல்;
வி. சிவசுப்பிரமணியம்
(மகன்)
(23413)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 392/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 28-11-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org